**கலென்பிந்துனுவெவ பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்தஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில்உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடங்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் கணக்கீடு செய்ய முடியாது போன ரூபா.14,017,490 ஆன மதகு, பாலம் மற்றும் நீர் தொகுதிகளின் பெறுமதி மீளாய்வாண்டில் மூலதன மானிய கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக. | மீளாய்வாண்டில் மூலதன மானியத்தை சரியாக கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் கணக்கீடு செய்ய முடியாது போன நீர் சுத்திகரிப்பு அலகொன்று மற்றும் பிலிசரு மத்திய நிலையத்தின் பொதுக் கிணறொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ரூபா.2,524,650 ஆன பெறுமதி மதகு மற்றும் பாலத்தின் கீழ் காட்டப்படிருந்தது. | -மேற்படி- | சரயான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா.14,000,000 பெறுமதியான நீர் பவுசரின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் மூலதன மானிய பெறுவனவு ரூபா.16,029,847 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா.10,422,698 ஆக ரூபா.5,607,140 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் மிகையின் பற்றாக்குறையின் இனங்காணப்பட்ட மூலதன செலவு மானியம் ரூபா.2,509,894 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் அது ரூபா.2,864,533 ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா.2,509,594 தொகை விரிவான வருமானக் கூற்றில் மீண்டுவராத மானியமாக காட்டுப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மீண்டுவராத மானியத்தை சரியான இனங்காண வேண்டும். |
| (எ) | 2021 ஆண்டில் செயற்படுத்திய 04 கருத்திட்டங்களிற்கு உரிய மதகு நிர்மாணப் பெறுமதி ரூபா.2,587,404 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மூலதன மானியம் மற்றும் ஆதன பொறிகள், உபகரணங்களை சரியாக இனங்காண வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் தேறிய சொத்துக்கள்/மூலதன மாற்றல் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கப்படாத மூலதன செலவுப் படிகள் ரூபா.8,392,851 தொகையும் கடந்த காலத்திற்குரிய மூலதன செலவுப் படிகள் பிழைகளை திருத்துதல் ரூபா.14,017,490 தொகையும் மீளாய்வாண்டில் வருமானத்தில் இனங்காணல் ரூபா.25,069,894 தொகையும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஐ) | 2021 ஆண்டில் செயற்படுத்திய கருத்திட்மொன்றில் நிறுத்தப் பணம் ரூபா.40,113 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகள் மீள்நிரப்பல் ரூபா.22,110,010 ஆன போதும் உள்ளூராட்சி திணைக்களத்தின் சம்பள மீள்நிரப்பு பத்திர்ஙகளின் பிரகாரம் அது ரூபா.21,928,304 ஆனதில் | ஏற்றுக் கொள்வதாக. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கைகளுடன் இனங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.187,706 ஆன வித்தியாசமொன்றானது. | | |
| (ஆ) | விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் வாகன வாடகை வருமானம் ரூபா.1,945,160 ஆன போதும் அட்டவணை பிரகாரம் அவ் வருமானம் ரூபா.1,673,680 ஆனதில் ரூபா.291,480 ஆன வித்தியாசமொன்றானது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று பிரகாரம் கடையறை வாடகை ரூபா.419,995 ஆன போதும் அதற்குரிய அட்டவணை பிரகாரம் அது ரூபா.409,995 ஆனதில் ரூபா.10,000 ஆன வித்தியாசமொன்றானது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசுப் பாயச்சல் கூற்றில் செம்மையாக்கலாக குறிப்பிட்டுள்ள கிடைக்க வேண்டியவற்றின் குறைவு ரூபா 21,574,039 தொகை மற்றும் செலுத்த வேண்டியவற்றின் அதிகரிப்பு ரூபா 16,521,495 தொகையை கணக்கிட்ட விதம் மற்றும் அதற்குரிய கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் பெறுமதிகளில் உள்ளடங்கிய மூலதன செலவுகளின் கடன்படுனர், கடன்கொடுனர்களை அகற்றுதல் தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தேறிய சொத்துக்கள்/மூலதன மாற்றல் கூற்றில் திரண்ட மிகையின் கீழ் கடந்த காலத்தின் தவறுகளாக குறிப்பிட்ட ரூபா.17,961,710 தொகையை கணக்கிட்ட விதம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் பெறுமதி ரூபா.11,895,596 ஆன 10 கணக்கு மீதிகளை உறுதி செய்துகொள்ள போதிய சான்றுகளை சமர்பிக்கப்படாததால் கணக்காய்வின் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | போது அவற்றை திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்படும் 2020 ஆண்டில் நிர்மாணித்த பெறுமதி ரூபா.5,111,926 ஆன மதகு, பாலம் கொங்கிரீட் பாதை தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.25,424,762 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.27,545,544 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 2,656,827 | 2,702,644 | 2,922,213 | 5,463,776 | 2,516,727 | 2,859,504 | 1,474,449 | 5,683,345 |
| (ii) | வாடகை | 10,142,350 | 6,471,310 | 5,473,490 | 1,729,805 | 2,404,000 | 1,913,050 | 1,462,140 | 731,985 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 820,000 | 779,250 | 576,500 | 376,500 | 912,000 | 969,505 | 795,755 | 173,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,494,300 | 10,233,633 | 14,477,380 | 4,169,197 | 23,879,750 | 17,862,453 | 9,840,853 | 8,412,944 |
| | | 31,113,477 | 20,186,837 | 23,449,583 | 11,739,278 | 29,712,477 | 23,604,512 | 13,573,197 | 15,002,024 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 5,107,976 ஆன நிலுவை வீதவரி அறவிடப்படாதிருந்ததுடன் 173 அலகுகளிலிருந்து வியாபார வரி ரூபா.355,800 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கடை வாடகை ரூபா 1,066,805 தொகை 1 தொடக்கம் 2 வருட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் சபையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக 11 தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 663,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

(இ) **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 376,500 தொகை ஆண்டு 01 – 02 இடையிலான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை | -மேற்படி- | -மேற்படி- |

(ஈ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2022 திசெம்ப்ர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 600,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,160,150 அழைப்பித்திருக்கவில்லை. | -மேற்படி- | அழைப்பித்துக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 மார்ச் 28 ஆம் திகதிய இலக்கம் NCP/LG/DE/04/04/2020 கொண்ட கடிதம் பிரகாரம் சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை கடன் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக் கூடாத போதும் 2020 ஆண்டில் 03 இயந்திர உபகரணங்களை கடன் அடிப்பைடயில் வழங்கியதன் காரணத்தால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 663,000 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 424,198 இனை செலுத்தி திர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் அதனுள் 6 ஆண்டுகளை விட பழமையான ரூபா 350,378 ஆன மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டினுள் சபை அதிகார பிரதேசத்தில் வருமானம் உழைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய கணிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் அதன் காரணமாக அறிவித்தல் பலகை வேலைகள் மற்றும் தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து அறவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை. | -மேற்படி- | வருமானத்தை இனங்கண்டு சேகரிக்க வேண்டும் |
| (ஈ) | சபைக்கு சொந்தமான இறைச்சிக் கடைகள், மாடு அருப்பிடம் மற்றும் மீன்கள் பலகைகள் பௌதீக ரீதியாக இன்றி பெயரிற்கு மாத்திரம் சொத்துக்களை குத்தவை வழங்கியதால் சபைக்கு பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | பௌதீக சொத்துக்கள் இல்லாது குத்தகை வழங்கல் மேற் கொள்ளக் கூடாது. |
| (உ) | சபைக்கு சொந்தமான 31 கடையறைகள் பல ஆண்டுகளாக திருத்தம் செய்து வியாபாரம் மேற்கொள்ள முடியுமானவாறு கவர்ச்சியாக தயாரித்திருக்காததால் மீளாய்வாண்டில் 10 கடையறைகள் எந்த தரப்பினராலும் வாடகைக்கு எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | இக் கடையறைகளை திருத்தம் செய்து வாடகைக்கு வழங்க வேண்டும். |
| (ஊ) | சபையில் கடமையாற்றும் ஊழயர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் அலுவலகத்தில் இருப்பதனை உறுதி செய்து கொள்ள விரல் அடையாள இயந்திரம் மற்றும் CCTV கெமரா தொகுதி போன்ற கட்டுப்பாட்டு முறைகளை ஏற்படுத்தியிருக்கவல்லை. | -மேற்படி | நவீன தொழிநுட்ப முறைகளை பயன்படுத்த வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து அன்பளிப்பாக கிடைத்திருந்த உபகரணங்களின் பெறுமதியை இனங்கண்டு பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. | -மேற்படி | பொருட்பதிவேட்டை உரியவாறு பேணிக் கொள்ள வேண்டும். |